# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 363/மா/2025

நாள் 30.06.2026

B. சரவணன்
சென்னை–600 017 --- முறையீட்டு மனுதாரர்

(1) மண்டல அலுவலர், மண்டலம்–9
பெருநகர சென்னை மாநகராட்சி
(2) உரிமையாளர், சங்கீதா உணவகம்,
சென்னை–600 034. --- எதிர்மனுதாரர்கள்

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவரின் 20.08.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.08.2025 அன்று பெறப்பட்டு 363/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

## ஆணை

சென்னை–600 017, தியாகராய நகர், புது தெரு, கதவு எண் 1 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. B. சரவணன் என்பவர் தனது 20.08.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் தெரிவிப்பது 30.07.2025 அன்று சென்னை மாநகராட்சி ஆணையர், உதவி ஆணையர், மண்டலம் 9, உதவி பொறியாளர் வார்டு–113, அதிகாரிகள் இவர்களிடம் ஒப்புகையுடன் அளித்த புகார் மனு இம்மனுவுடன் இணைப்பு. இதுவரை நடவடிக்கையும் இல்லை பதிலும் இல்லை என்பதால் இம்மனுவை மேல்முறையீடு செய்கிறேன்.

கதவு எண்–68, புதிய எண்–82, நுங்கம்பாக்கம், சென்னை–34, சங்கீதா உணவகம் இயங்கி வரும் கட்டிடம் நான்கு புற இடைவெளிகள் இல்லாமலும், சட்ட விதிகள்படி பார்க்கிங் வசதிகள் இல்லாமலும், மொத்தமாக நான்கு தளங்களில் இயங்கி வருவதை புகைபடத்தில் இம்மனுவுடன் காணலாம். இங்கு பார்க்கிங் வசதிகள் இல்லாததால் இக்கட்டிடத்திற்கு வரும் வாடிக்கையாளர்கள் வணிக வளாகத்துக்கு வருபவர்களும் தங்களது கனரக மற்றும் இருசக்கர வாகனத்தை

நடைபாதைகளிலும் நடுசாலைகளிலும் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டு நடைபாதை சாலைகளை முழுவதுமாக ஆக்கிரமிப்பு செய்யபடுவதால் விபத்துகளும் ஏற்பட்டு எவரும் மாநகராட்சி பாதை பயன்படுத்த முடியவில்லை மற்றும் கூடுதலாக ஆக்கிரமிப்புகளையும் அகற்றி கூடுதல் அடுக்குமாடிகளை இடிக்க உத்திரவிட கோரி பொதுநல மேல்முறையீட்டு புகார் மனு.''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 03.11.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது. ஆனால் அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 04.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 29.04.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையர் தனது 03.06.2026 நாளிட்ட கடித எண் ம.அ.9 ந.க. எண் 03424/2026–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

“பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9, பகுதி–26, கோட்டம்–113–இன் கீழ் வரும், நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, பழைய கதவு எண்.68 (புதிய கதவு எண்.82)–இல் அமைந்துள்ள “சங்கீதா உணவகம்'' (Sangeetha Restaurant) என்ற பெயரிலான வளாகத்தில் உள்ள கட்டிட விதிமீறல்கள் குறித்து பெறப்பட்ட மனுவின் அடிப்படையில், உதவிப் பொறியாளர் 09.10.2025 அன்று அக்கட்டிடத்தை ஆய்வு செய்தார். இந்த ஆய்வைத் தொடர்ந்து, அமலாக்க நடவடிக்கையாக 10.10.2025 அன்று தாக்கீது வழங்கப்பட்டது.

கட்டிட உரிமையாளர் இதற்கு பதிலளிக்கும் விதமாக, 14.10.2025 அன்று ஒரு பதில் கடிதத்தைச் சமர்ப்பித்தார். சம்பந்தப்பட்ட கட்டிடம் ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலான பழமை வாய்ந்தது என்றும், தற்போது அக்கட்டிடத்திற்குரிய கட்டுமான அனுமதி (Building Permit) ஏதும் இல்லை என்றும் அதில் குறிப்பிட்டுள்ளார். உரிமையாளரிடமிருந்து பெறப்பட்ட பதிலின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கையாக படிவம்–2 (Form-2) வெளியிடப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.''

5. மனுதாரர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

“சென்னை 34, நுங்கம்பாக்கம், கதவு எண்–68, புதிய எண்–82, என்கிற முகவரியில் அமைந்துள்ள சங்கீதா உணவகத்தின் கட்டிடம் நான்கு புற இடைவெளிகள் இல்லாமலும், சட்ட விதிகள்படி பார்க்கிங் வசதிகள் இல்லாமலும், மொத்தமாக நான்கு தளங்களில் இயங்கி வருகிறது. இங்கு பார்க்கிங் வசதிகள் இல்லாததால் இக்கட்டிடத்திற்கு வரும் வாடிக்கையாளர்கள் மற்றும் வணிக வளாகத்துக்கு வருபவர்களும் தங்களது கனரக மற்றும் இருசக்கர வாகனத்தை நடைபாதைகளிலும் நடுசாலைகளிலும் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்படுகிறது. மேலும் நடைபாதை சாலைகளை முழுவதுமாக ஆக்கிரமிப்பு செய்யப்படுவதால் விபத்துகளும் ஏற்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பாதையை யாரும் பயன்படுத்த முடியவில்லை. மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் அலுவலகத்தால் மேற்கண்ட சங்கீதா உணவகத்திற்கு அளிக்கப்பட்ட தாக்கீதுகளின் நகல் மற்றும் அவர்கள்

அளித்த விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

2. மேலும், விதிமீறி கட்டப்பட்ட மேற்கண்ட கட்டத்தின் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறும் , விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும், இம்முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''.

6. முதலாம் எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் இளநிலைப் பொறியாளர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''மனுதாரர் குறிப்பிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 113, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை பழைய கதவு எண் 68 (புதிய கதவு எண் 82)–இல் அமைந்துள்ள சங்கீதா உணவகம் கட்டிடம் 09.10.2025 அன்று கள ஆய்வு செய்யப்பட்டது. விதிமீறல் கண்டறியப்பட்டதால், அமலாக்க நடவடிக்கையாக 10.10.2025 அன்று தாக்கீது வழங்கப்பட்டது. இதற்கு கட்டிட உரிமையாளர் தனது14.10.2025 நாளிட்ட கடிதத்தில் சங்கீதா உணவகம் இயங்கும் கட்டிடம் 50 ஆண்டுகளுக்கு மேலான பழமையான கட்டிடம் என்றும் அதற்கு தற்போது அக்கட்டிடத்திற்குரிய கட்டுமான அனுமதி ஏதும் இல்லை என்று தெரிவித்துள்ளனர். மேற்கண்ட கட்டிடம் தோராயமாக 12,000 சதுரடியில் அமைந்திருப்பதால் மேற்கண்ட கட்டிடத்திற்கு அக்கால கட்டத்தில் MMDAவால் அனுமதி அளிக்கப்பட்டிருக்கும், மேலும் அது குறித்த ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என்று சங்கீதா உணவகத்தின் கட்டிட உரிமையாளர் தெரிவித்த நிலையில் அக்கட்டிடத்தின் மீது உரிய சட்ட பூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''.

7. இரண்டாம் எதிர்மனுதாரரான திரு. பா. ஞானசேகரன் என்பவர் 04.06.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

''பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, பழைய கதவு எண்.68 புதிய கதவு எண்.82ல் அமைந்துள்ள 3 மாடிகள் கொண்ட சங்கீதா உணவக கட்டிடத்தினை 2003–ம் வருடம் கிரையம் பெற்றேன். அக்கட்டிடத்தை சங்கீதா உணவகம் நடத்துவதற்கு வாடகைக்கு விட்டுள்ளேன்.

மேற்கண்ட கட்டிடம் 50 வருடங்களுக்கு மேலானதாகும். 50 வருடங்களுக்கு மேலான கட்டிடத்திற்கு பார்க்கிங் வசதி அளிக்க எவ்வித விதிமுறையும் இல்லை. சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் 1976க்கு பின் பார்க்கிங் வசதி அளிப்பது குறித்து வழிகாட்டுதலை வெளியிட்டுள்ளது. அதன்படி ஒரு கார் பார்க்கிங்கிற்கு 50 ச.மீ இடத்திற்கு அளிக்க வேண்டும். அதன்படி எங்கள் உணவகத்திற்கு பக்கத்தில் உள்ள இடத்தினை குத்தகை அடிப்படையில் பெற்று எங்கள் உணவகத்திற்கு வரும் வாடகையாளர்களின் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட சங்கீதா உணவகம் அமைந்துள்ள கட்டிடத்தில் எவ்வித விதி மீறலும் இல்லை என்ற விவரத்தினை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

8. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை, இளநிலைப் பொறியாளரின் வாக்குமூலம் மற்றும் இரண்டாம் எதிர்மனுதாரரான திரு. பா. ஞானசேகரன் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

சென்னை 34, நுங்கம்பாக்கம், கதவு எண்–68, புதிய எண்–82, என்கிற முகவரியில் அமைந்துள்ள சங்கீதா உணவகத்தின் கட்டிடத்தில் நான்கு புற இடைவெளிகள் மற்றும் பார்க்கிங் வசதிகள் இல்லாமல், மொத்தமாக நான்கு தளங்களில் இயங்கி வருகிறது என்பதும், பார்க்கிங் வசதிகள் இல்லாததால் இக்கட்டிடத்திற்கு வரும் வாடிக்கையாளர்கள் மற்றும் வணிக வளாகத்துக்கு வருபவர்களும் தங்களது கனரக மற்றும் இருசக்கர வாகனத்தை நடைபாதைகளிலும் நடுசாலைகளிலும் நிறுத்துவதால் போக்குவரத்து நெரிசல்கள் ஏற்பட்டும், நடைபாதை சாலைகளை முழுவதுமாக ஆக்கிரமிப்பு செய்யப்படுவதால் விபத்துகளும் ஏற்படுகிறது என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இப்பாதையை யாரும் பயன்படுத்த முடியவில்லை என்பதும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் அலுவலகத்தால் மேற்கண்ட சங்கீதா உணவகத்திற்கு அளிக்கப்பட்ட தாக்கீதுகள் மற்றும் அவர்கள் அளித்த விளக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் உரிய நடவடிக்கை எடுக்குமாறும், விதிமீறி கட்டப்பட்ட மேற்கண்ட கட்டத்தின் மீது உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறும் மற்றும் விதி மீறி கட்டப்பட்ட கட்டிடத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்காத பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9ன் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 113, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, பழைய கதவு எண் 68 (புதிய கதவு எண் 82)–இல் அமைந்துள்ள சங்கீதா உணவகம் கட்டிடத்தினை கள ஆய்வு செய்யப்பட்டதில், விதிமீறல் கண்டறியப்பட்டதால், அமலாக்க நடவடிக்கையாக மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தாக்கீது வழங்கப்பட்டது என்பதும், இதற்கு சங்கீதா உணவகம் இயங்கும் கட்டிடம் 50 ஆண்டுகளுக்கு மேலான பழமையான கட்டிடம் என்பதால், தற்போது அக்கட்டிடத்திற்குரிய கட்டுமான அனுமதி ஏதும் இல்லை என்றும், மேற்கண்ட கட்டிடம் தோராயமாக 12,000 சதுரடியில் அமைந்திருப்பதால் மேற்கண்ட கட்டிடத்திற்கு அக்கால கட்டத்தில் MMDAவால் அனுமதி அளிக்கப்பட்டிருக்கும், ஆனால் அது குறித்த ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என்று சங்கீதா உணவகத்தின் கட்டிட உரிமையாளர் தெரிவித்த நிலையில் அக்கட்டிடத்தின் மீது உரிய சட்ட பூர்வ தொடர் நடவடிக்கை பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என தெரிவித்திருப்பது முதலாம் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் இளநிலைப்பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை, பழைய கதவு எண்.68 புதிய கதவு எண்.82ல் அமைந்துள்ள 3 மாடிகள் கொண்ட சங்கீதா உணவக கட்டிடத்தினை 2003–ம் வருடம் கிரையம் பெற்று, அதனை சங்கீதா உணவகம் நடத்துவதற்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட கட்டிடம் 50 வருடங்களுக்கு மேலான கட்டிடம் என்பதால், இக்கட்டிடத்திற்கு பார்க்கிங் வசதி அளிக்க எவ்வித விதிமுறையும் இல்லை என்பதும், சென்னை பெருநகர வளர்ச்சிக்குழுமம் 1976க்கு பின் பார்க்கிங் வசதி அளிப்பது குறித்து வெளியிட்ட வழிகாட்டுதலின்படி, ஒரு கார் பார்க்கிங்கிற்கு 50 ச.மீ இடம் அளிக்க வேண்டும் என்பதும், அதன்படி தங்கள் உணவகத்திற்கு பக்கத்தில் உள்ள இடத்தினை குத்தகை அடிப்படையில் பெற்று தங்கள் உணவகத்திற்கு வரும் வாடகையாளர்களின் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்த வசதி செய்யப்பட்டுள்ளது என்பதும், எனவே, மேற்கண்ட சங்கீதா உணவகம் அமைந்துள்ள கட்டிடத்தில் எவ்வித விதி மீறலும் இல்லை என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரின் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9, பகுதி 26, கோட்டம் 113, நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலை பழைய கதவு எண் 68 (புதிய கதவு எண் 82)–இல் அமைந்துள்ள சங்கீதா உணவகம் கட்டிடம் கள ஆய்வு செய்யப்பட்டு, விதிமீறல் கண்டறியப்பட்டதால், அமலாக்க நடவடிக்கையாக மேற்கண்ட கட்டிட உரிமையாளருக்கு தாக்கீது வழங்கப்பட்டுள்ள நிலையில், இதற்கு சங்கீதா உணவகம் இயங்கும் கட்டிடம் 50 ஆண்டுகளுக்கு மேலான பழமையான கட்டிடம் என்பதால், தற்போது அக்கட்டிடத்திற்குரிய கட்டுமான அனுமதி ஏதும் இல்லை என்றும், அக்கால கட்டத்தில் MMDAவால் அனுமதி அளிக்கப்பட்டிருக்கலாம் என்பதற்கான ஆவணங்கள் கிடைக்கப்பெறவில்லை என்று சங்கீதா உணவகத்தின் கட்டிட உரிமையாளர் தெரிவித்திருந்தாலும், அக்கட்டிடத்தின் மீது உரிய சட்ட பூர்வ தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 9–ன் இளநிலைப் பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, உரிய சட்டபூர்வ நடவடிக்கையினை தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971ன் கீழும் மற்றும் விதி மீறி கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து மாண்பமை உச்சநீதிமன்றம் மற்றும் மாண்பமை உயர்நீதிமன்றங்கள் வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களின்படியும் விரைந்து மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 9–ன் உதவி ஆணையருக்கு அறிவுறுத்துமாறு, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. B. சரவணன்,
கதவு எண் 1 , புது தெரு,
தியாகராய நகர், சென்னை–600 017.

(2) ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர், மண்டலம் 9,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண் 4, லேக் ஏரியா, 4வது குறுக்கு தெரு, சென்னை–600 034.

(4) திரு. பா. ஞானசேகரன், கதவு எண் 22/31,
பாகிரதி அம்மாள் தெரு,
தியாகராய நகர், சென்னை–600 017.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர்,
மழைநீர் வடிகால் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர். 2/7/26